★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 19௨ திங்கள் (3—9—56) ★ ★ வெளியூர்: ஆவணி 20௨ செவ்வாய் (4—9—56) [இதழ் 72

மற்றுமோர் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை!

புதுடில்லி, செப் 1—

பம்பாயில் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்றே அளவிலும் உருவிலும் ஒரே மாதிரியான மற்றுமோர் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவுவதுபற்றி டில்லி தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

ஆண்டொன்றுக்கு சுமார் 12 இலட்சம் டன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய இந்தத் தொழிற்சாலைக்கான திட்டத்தை சென்னை மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பிரபல தொழிலதிபர் சர்க்காரிடம் தாக்கல் செய்திருக்கிறாராம்.

'நடைபெறப்போவதே கடைசி ஜனநாயகத் தேர்தலா?'

'சர்வாதிகாரப்போக்குடையவரிடமிருந்து நாட்டையும் ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டாமா?'

'தேர்தலில் ஈடுபடுவதை மட்டும் வேலையாகக் கொண்டதல்ல தி.மு.க.'

மக்களுக்குக் கருத்து விளக்கம் தர தோழர்களை அழைக்கிறார் அண்ணா

"தேர்தலுக்கு நிற்பதையே வேலையாகக் கொண்டதல்ல தி. மு. கழகம்.

"'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்,' என்ற இலட்சியத்திற்காகப் போராடும் தி. மு. கழகம் தனது பாதையில் நடந்து செல்லும்போது இடையில் வந்துவிழும் வேலைதான் வரப்போகும் தேர்தல்!

"குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுபவர்கள் கிண்டியில் பந்தயம் முடிந்ததும், உதகமண்டலம், பெங்களூர், பம்பாய், கல்கத்தா—என்று பந்தயம் நடைபெறும் இடங்களுக்கெல்லாம் ஓடிக்கொண்டிருப்பர்; அவர்களுக்கெல்லாம் குதிரைப் பந்தயமாடுவதுதான் வேலை. அதுபோன்று, தி. மு. கழகம் ஒன்றும் தேர்தலையே வேலையாக வைத்துக்கொண்டிருக்கவில்லை.

"வரப்போகும் தேர்தலில், வீட்டுக்கு வீடு கதவைத் தட்டி ஓட்டுக் கேட்கப் போகிறார்கள்; அப்படி வீட்டுக்கதவைத் தட்டுகிற கரம் யாருடையது? அந்த கதவு தட்டும் உருவம் எப்படிப்பட்ட உள்ளம் கொண்டது?—என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்குமாறு மக்களைத் தி. மு. கழகம் கேட்கிறது. இது ஜனநாயக வளர்ச்சிக்காக—நாட்டில் நல்லாட்சி ஏற்பட வேண்டுமென்பதற்காகக் கழகம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயமான வேலையாகும்.

"நேருவும் ஆச்சாரியாரும் ஒரு பத்துநாள் வித்தியாசத்தில் ஒரு விவகாரம குறித்துப் பேசியிருக்கிறார்கள்; ஒரே மாதிரியான கருத்தறிவிக்கிறார்கள்.

"'இப்போது நடைபெறுகிற தேர்தல் நேர்முகத் தேர்தலாகும்; இந்த நேரடித்தேர்தல் சிரமம் மிகுந்ததாயும் செலவுள்ளதாகவும் இருக்கிறது; ஆகவே, மறைமுகத் தேர்தல் வேண்டும்', —என்று அவர்கள் பேசியிருக்கின்றனர்.

"மறைமுகத் தேர்தல் என்பது, இப்போது ஒவ்வொரு தொகுதியிலும் வாக்காளர் அனைவரும் சட்டசபைக்கோ, மக்கள் சபைக்கோ நேரடியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதை விடுத்து, ஒவ்வொரு தொகுதியிலும் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி, அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களை மட்டுமேகொண்டு ஆட்சி மன்றத்திற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதாக அமையும்.

"நேரடித் தேர்தல் என்றால், இலட்சம் மக்களை ஒரு தொகுதியில் சந்தித்தாகவேண்டியுள்ளது. மக்களிடத்தில் வந்தாலோ அவர்கள், 'எங்களுக்கு என்ன செய்தீர்கள்?' என்று கேட்கிறார்கள்; அப்போது என்ன கூறுவதென்று எங்களுக்குத் தெரியவில்லை; வெட்கமாயிருக்கிறது; எனவே, இந்தத் தேர்தல் முறையை ஒழித்துவிட்டு, மறைமுகத் தேர்தல் நடத்தினால், இருக்கின்ற பணபலத்தாலும், சாதி வெறியாலும் சுலபமாக நீண்ட நெடிய நாளைக்குக் காங்கிரசே சர்வாதிகார ஆட்சி நடத்தமுடியும்—என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர் போலும்!

"நேரு போன்ற காங்கிரஸ் தலைவர்களின் போக்கைப் பார்த்தால் இந்தியாவில் இப்போது நடைபெறப்போகும் பொதுத் தேர்தல்தான், கடைசி சனநாயகத் தேர்தலாயிருக்குமோவென அஞ்சுகிறேன்.

"எனவே, இதுபோன்று சர்வாதிகார வெறிகொண்டவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றவும், சனநாயகம் தழைக்கச் செய்யவும் நாட்டு நலனில் அக்கரை கொண்ட ஒவ்வொருவரும் பாடுபட்டாக வேண்டும். அந்த வகையில்தான் தி. மு. கழகம் தனது கடமையை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது.

"சனநாயகம் நின்று நிலவி, மக்களுக்குப் பயன்தர வேண்டுமானால், மாட்டுக்கு மூக்கணாங்கயிறு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஒரு ஆட்சிக்கு உருவான நல்ல எதிர்க்கட்சியும் தேவையாகும்,"

—என்று அண்ணா அவர்கள், கடந்த 27—8—56ல் சென்னை—தேனாம்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது பேச்சின் முற்பகுதிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

போபாலில் சனாதன வெறி

தாழ்த்தப்பட்டோருக்குப் பாடுபட்டவர் தாக்கப்பட்டாராம்

போபாலிலிருந்து 56 மைல் தூரத்திலுள்ள காரி எனும் கிராமத்தில், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் நடத்தியதற்காக அ. இ. அரிசன ஊழியர் சங்க அமைப்பாளர் சுந்தர்லால் என்பவர் தாக்கப்பட்டுள்ளார்.

அங்குள்ள கோவில் ஒன்றுக்குள் அரிசனங்களை அவர் அழைத்துச் சென்று திரும்புகையில், பத்து பேர் அவரைத்தாக்கி செருப்பால் அடித்ததாகச் செய்தி ஒன்று கூறுகிறது; மீண்டும் அக்கிராமத்தில் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் நடத்தினால் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று அவரை அச்சுறுத்தினராம்.

உதவி கமிஷனராகும் முதல் பெண்மணி!

சிம்லா, செப். 1—

சிம்லா உதவி கமிஷனராக முதல் முதலாக ஒரு பெண்மணி நியமனம் பெற்றிருக்கிறார்.

நான்காண்டுகளுக்கு முன் இந்திய நிர்வாக இலாகாவில் பணி தொடங்கிய சரளா கன்னா என்ற ஐ. ஏ. எஸ். பெண்மணி, நேற்று உதவி கமிஷனர் பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

எவ்வளவு தெரியுமா?

மாநில சர்க்கார்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கு உதவியளிப்பதற்காக, கடப்பு ஆண்டில் இதுவரையில் ரூ. 6,14,011 மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

'சுயநலமிகள் கூட்டம் பெருகுகிறது'

காங்கிரஸ் நிலை: அனுமந்தையா வர்ணனை

மைசூர், செப். 2—

"காங்கிரஸ் நிறுவனத்தில் சத்தியத்திற்கு இருந்துவந்த முக்கியத்துவம் குறைந்து வருகிறது; சுயநலமிகள் கூட்டம் பெருகிவருகிறது; காங்கிரஸ்காரர்கள், இப்போது பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்குக்கூடத் தைரியம் இழந்துவிட்டார்கள்; இந்த நிலைமை இன்னும் நீடித்துக் கொண்டே போனால், ஜனநாயகம் மறைந்தொழிந்து நமது நாடு மீண்டும் அடிமை நாடாகிவிடும். இந்தத் தடவை நமது நாடு அமெரிக்கருக்கோ ரஷ்யருக்கோ அடிமைப்பட்டுவிடும்."

இவ்வாறு முன்னாள் மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா அவர்கள் தென் கன்னட மாணவர் சங்கத்தைத் துவக்கிவைத்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

டெலிவிஷன் மூலமாய்ப் படிப்பிக்கும் கல்லூரி

செப்டம்பர் 12-ந் தேதிமுதல் சிகாகோ கல்வித்துறை, டெலிவிஷன் மூலமாகப் பொதுமக்களுக்கு இலவசக் கல்லூரிப் படிப்பு வழங்கும்.

தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவில் 1955-ல் 66,13,200 புட்டி (ஒவ்வொன்றும் 2-அவுன்ஸ்) பவுண்டன் பேனா மை தயாரிக்கப்பட்டது.

★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை

திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★

நிறத் திமிர் கோரத் தாண்டவம்!

நீக்ரோ மாணவர்களுக்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

நீக்ரோவப் பெண்ணை கேலியும் கிண்டலும் செய்தனர்

நியூயார்க், செப். 1—

ஆபிரகாம் லிங்கன் பிறந்த அமெரிக்காவில்—நாகரீகம் வளர்ந்தோங்கியுள்ள நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் ஒரு பகுதியில், இன்னும், 'நீக்ரோவ மக்களை ஒதுக்கிவைக்க வேண்டும்; வெள்ளையரோடு அவர்கள் சேர்ந்து வாழவும் தகுதியற்றவர்கள்' என்றுகூறும் கேவலமான—அநாகரீகமான மனப்போக்குடையவர்கள் இருப்பது வருந்தற்குரியது.

டெக்சாஸ் மாநிலத்தில் மான்ஸ்பீல்டு எனும் நகரத்தில், 'பள்ளிகளில் இனவேற்றுமை பாராட்டக்கூடாது; நீக்ரோவரும் வெள்ளையரும் சேர்ந்துதான் படிக்க வேண்டும்' என்ற நீதிமன்ற உத்திரவிற்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நகரில் உள்ள பள்ளிக்கு வந்த 12 நீக்ரோவரை உள்ளே செல்ல விடாமல் தடுக்க முயன்றதுடன், இந்த வெள்ளை நிறத் திமிர் கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், ஒரு நீக்ரோவ மாதரசியை வழிமறித்துக் கேலியும் கிண்டலும் செய்து, ஆப்பிள், தக்காளிப் பழங்களால் தாக்கி கலாட்டா செய்தனராம்.

'நீக்ரோவ மாணவர்களுக்குப் பள்ளி செல்ல போலீஸ் பாதுகாப்புத் தரப்படுமானால் நாங்களும் ஆயுதமேந்தி எதிர்ப்போம்' என்று சுமார் 250 வெள்ளையர்கள் சர்க்காரை மிரட்டினராம்!

ஒரு பள்ளிக்கூடத்தின் வாயிலில், நீக்ரோவரைப் போன்ற ஒரு பொம்மை செய்து கம்பம் ஒன்றில்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—9—'56 திங்கள்

தெளிவு பெறுகின்றனர்! ஆனல்...?

கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தில், சுயராஜ்யம்—குடியரசு என்பவைகளின் பேரால் நடைபெற்றுவரும் ஆட்சி முறையையும், அந்த ஆட்சிதனை நடத்திச் செல்லும் காங்கிரஸ் தலைவர்களின் சொல்—செயல் ஆகியவைகளையும் கூர்ந்து கவனிப்போமானல், நம் திராவிடம், இந்தியப் பேரரசினரால் எந்த அளவுக்கு அடிமைப்படுத்தப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வருகிறது என்பதை உணரக்கூடும்.

இந்தியப் பேரரசில் பொறுப்பேற்றுள்ளவர்கள் — குறிப்பாகத் தலைவர் இராசேந்திர பிரசாத் அவர்களும், பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களும் திராவிடத்தின் பெருமையையும் அதன் சிறப்பையும் வர்ணித்துக்கொண்டே செயல் முறையில் அதற்கு மாறாகவே நடந்து வருகின்றனர். இந்திய ஆட்சிப் பீடத்தின் இந்த இரு பெரும் தலைவர்களிடத்திலேயே இவ்வித எண்ணம் ஊறிப்போயிருக்கிறதென்றால், மற்றவர்களைப்பற்றி நாம் விவரிக்க வேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறோம்.

அரசியல் உரிமையிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்கள்வரை இந்திய அரசியலாரின் நடவடிக்கைகள் எந்த இலட்சணத்திலிருக்கிறதென்பதைச் சென்ற ஒன்பதாண்டுகளாகப் பொதுமக்கள் நன்கு உணர்ந்து வருகின்றனர்.

இவ்விதம் உணர்த்தும் தன்மையை மக்களிடையே வளரச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை, ஆட்சி பீடத்திலுள்ளவர்களோ, அவர்களுக்குத் துணையாய் நிற்பவர்களோ ஒப்புக்கொள்ள மறுத்தாலும், நேர்மை உள்ளம் படைத்த சில காங்கிரஸ்காரர்களாவது உண்மையை உணருவதும், அதன் பயனாகத் தங்களின் குழப்ப நிலையிலிருந்து தெளிவு பெறுவதுமான நிகழ்ச்சிகளை நாம் கண்டுவருகிறோம.

அதிலும் குறிப்பாக, ஆட்சி பீடத்திலிருந்து வெளியேறுபவர்களே இந்தியப் பேரரசின் பிற்போக்குத்தன்மையை மனம் குமுறிவிவரிக்கிறார்களென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான பணி வீணாகவில்லை என்பதை உணர்ந்து அப்பணியில் மேலும் தீவிரமாகத் தொண்டாற்ற கழகத் தோழர்களுக்கு நம்பிக்கையும் அக்கரையும் உண்டாகி வருகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் இந்திய அரசியலார் நம் திராவிடத்திற்கு எவ்வளவு வஞ்சனை புரிந்திருக்கின்றனர் என்பதைத் தக்க ஆதாரங்களுடன், புள்ளி விவரங்களுடன் நாடறிய, ஏன்? — நாடாளும் கோஷ்டியினரும் அறியத் திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டிவந்திருக்கிறது — தொடர்ந்து குற்றச்சாட்டுகளை மக்கள் மன்றத்தில் வெளியிட்டும் வருகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளை இதுவரை எந்த அமைச்சரும் மறுத்தது கிடையாது. அல்லது இதெல்லாம் வீண் புரளியென்றும் கூற முன்வந்தார்களில்லை. இன்னும் சொல்லப்போனல் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போரில் சிலர் சமயம் வாய்க்கும்போதெல்லாம் இந்திய அரசியலாரின் ஓரவஞ்சனையைப் பற்றித் திரைமறைவில் முணுமுணுப்பதும், அதிகார பீடத்திலிருந்து வெளியேறியபின், டெல்லி ஏகாதிபத்தியத்தின்மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுவதையும் நாம் கண்டுவருகிறோம்.

எனினும், இவ்விதம் குற்றப்பட்டியலை வெளியிடும் காங்கிரஸ் தலைவர்கள், நம் நாடு இந்தியப் பேரரசின் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்கு வழிவகை என்ன என்பதைக் குறித்துச் சிந்திக்கவோ, அக்கருத்தைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கோ அஞ்சுகின்றனர். அது மட்டுமல்லாமல் வேறுவகையில் மீண்டும் அதே இந்திய ஏகாதிபத்தியத்திற்குத் துணைபுரியவும் செய்கின்றனர்.

சென்ற வாரம் கோவைப் பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்ட ஒரிசா கவர்னர் பி. எஸ். குமாரசாமி இராசா அவர்கள், ஐந்தாண்டுத் திட்டங்களில் இந்திய அரசியலார் எவ்வளவு ஓரவஞ்சனையுடன் நடந்து வருகின்றனர் என்பதை மனவேதனையுடன் கூறியிருக்கிறார். அதன் விவரத்தை நாம ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம்.

கவர்னர் பதவியிலிருந்து கொண்டே (29-8-56 அன்று) இவ்வளவு அழுத்தந்திருத்தமாக இந்தியப் பேரரசின் போக்கினைக் கண்டித்துப் பேசிய தோழர் பி. எஸ். குமாரசாமி இராசா அவர்கள் நம தாயகத்தின்மீது கொண்டுள்ள நீங்காப் பற்றினை அனைவரும் பாராட்டியிருப்பார்கள்—பாராட்டுவதில் தவறுமில்லை.

ஆனல்இவ்வாறு இந்தியஏகாதிபத்தியத்தின் அநீதியைக் கண்டித்த குமாரசாமி இராசா அவர்கள் அடுத்த நிமிடமே தாயகத்தின் தன்மானத்திற்கு களங்கம் உண்டுபண்ணக்கூடிய பேச்சிலும் ஈடுபட்டிருக்கிறார்!

நம் மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டுமென்று தமிழ் மக்கள் அனைவரும் (தமிழ்நாட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ளோரும் அவர்களுக்குத் துதிபாடுபவர்களும் தவிர) ஒருமித்தக் குரலெழுப்பியுங்கூட அதனை நிறைவேற்றிவைக்கும் சாதாரணத் திறமை—அக்கரைகூடக் காமராசர் ஆட்சிக்கு இல்லை என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

காமராசர் போன்றவர்கள்தான் இவ்விதத் துரோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், இந்தியப் பேரரசின் போக்கினைகளை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய அறிவாற்றல் படைத்திருக்கும் முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி இராசா போன்றவர்கள்கூட 'தமிழ் நாடு' எனப் பெயரிடக்கூடாதென்றும், 'மதராஸ்' என்பது உலகமெல்லாம் தெரிந்திருக்கிறதென்றும், இந்தியைக் கட்டாயமாகப் பயில வேண்டுமென்றும் கோவைக் கூட்டத்தில் பேசியிருப்பது மிக விசித்திரமாயிருக்கிறது.

'தமிழ் நாடு' எனப் பெயரிடுவதால், 'சென்னை நகரம்' (Madras City) என்பது எங்கேயோ பறந்து போய்விடும் என்பதைப்போல குமாரசாமி இராசா போன்றவர்கள் பேசுவதுதான் வேடிக்கையாகவும் இருக்கிறது.

முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி இராசா அவர்களின் வாதப்படியே வைத்துக்கொண்டாலும், உலகனைத்தும் மிகமிக விளம்பரமாகியுள்ள இந்தியா — 'பாரத்' என்றும், பாராளுமன்றம் என்பது 'லோக் சபை'யாகவும், அதுபோலவே 'ராஷ்டிரபதி பவன்' 'ராஜபவன்' என்றெல்லாம் பெயர் மாற்றம் அடைந்து அவைகளை உலக நாடுகளெல்லாம் புரிந்து கொண்டு வரும்போது, சென்னை ராஜ்யம் என்பது தமிழ் நாடாக மாற்றப்பட்டால், அதுமட்டும் உலக நாடுகளின்—மக்களின் காதுகளில் ஏறுதென்று கூறுவதற்கு என்ன நியாயம் இருக்கிறதென்று கேட்கிறோம்.

எனவே, முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி இராசா அவர்கள், ஒருபுறம் இந்தியப் பேரரசின் அநீதிகளை விளக்கி எச்சரித்துக்கொண்டே மற்றொருபுறம் இந்தியப் பேரரசின் கோபத்துக்கு முழுக்க முழுக்க ஆளாகக்கூடாதென்று கருதித் தமிழகத்தின் மற்ற முக்கியப் பிரச்சினைகளில் குழப்ப நிலையை வளர்க்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியப் பேரரசினரின் ஓரவஞ்சனையினல் நம் தாயகம்—திராவிடம் எல்லாத் துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துகொண்ட முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி இராசா அவர்கள், மேலும் அத்தெளிவான நிலையிலிருந்து நம நாட்டின் உண்மையான விடுதலைக்குப் பணிபுரிய வேண்டுகிறோம்.

அதைவிடுத்து, ஏதோ திடீரென ஒரு நாளைக்கு நேரு சர்க்காரின அநீதிகளை எதிர்த்துப்பேசிவிட்டு, பிறகு, அதற்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்து நேரு சர்க்காரின் நடவடிக்கைகளை வேறு ரூபத்தில் ஆதரிப்பதென்றால், இதில் ஏதோ மர்மம இருக்கிறது என்று மக்கள் ஐயுறக்கூடும் என்பதை தோழர் குமாரசாமி இராசா அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஐந்து விநாடிகளில் இருதய ஆபரேஷன்!

ஐதராபாத், ஆக. 31—

பதின்மூன்று வயதுப் பெண் ஒருத்திக்கு இருதயத்தில் ஏற்பட்ட கோளாறு ஒன்றிற்காக இருதய ஆபரேஷன் செய்யப்பட்டதாம்!

இந்த ஆபரேஷனை ஐந்தே விநாடிகளில் செய்து முடித்தாராம்!

இருதயத்தின் மேல், கீழ்ப்பாகங்களின் இரத்த ஓட்டம் ஒரு கபாடத்தின்மூலம் தடைசெய்யப்பட்டு வந்ததாம; அதனையே டாக்டர் ஐந்து விநாடிகளில் சரிசெய்தாராம.

இதுவே மாநிலத்தில் முதன் முதலாக நடைபெற்ற இது போன்ற ஆபரேஷனும்!

ரூ. 1½ இலட்சம் செலவில்

செயற்கை அரிசி தயாரிக்கும் இயந்திரம்

புதுடில்லி—

செயற்கை அரிசி தயாரிப்பதற்கான காட்சி இயந்திரம் ஒன்று, வெளிநாட்டிலிருந்து ரூ. 1,50,000 செலவில் வரவழைக்கப்பட்டிருக்கிறதாம். இந்த இயந்திரம் இப்போது மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுவருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை

விரிவாக்குவதற்குத் திட்டமாம்

ரூ. 40 இலட்சம் பெறுமானமுள்ள சாதனங்கள் வாங்க ஏற்பாடு

புதுடில்லி, ஆக், 31—

சென்னை—பெரம்பூரிலுள்ள இரயில்பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள் ஆகியவை தருவிப்பதற்கு, இரண்டாவது தவணையாக ஐரோப்பிய நாடுகளுக்கு ரூ 40 இலட்சத்திற்கு 'ஆர்டர்கள்' கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது

ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ள அந்த இயந்திரங்கள் அனைத்தும் வந்தானதும், இங்கு ஆண்டொன்றுக்கு 350 இரயில் பெட்டிகள் வீதம் உற்பத்தி செய்யப்படுமென்றும், முன்பு, இந்த உற்பத்தி அளவுத்தொகையை 5 ஆண்டுகளில் அடைவதெனத் திட்டமிடப்பட்டதென்றும், ஆனல், இப்போது இருக்கிற நிலையில், ஒரு ஆண்டிற்கு முன்னதாகவே அந்த உற்பத்தி அளவை அடைந்துவிட முடியும் என்றும் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரயில் பிரயாணிகளுக்கு வசதிகள்

புதுடில்லி, ஆக. 30—

இரயில்களில் பிரயாணம் செய்வோருக்கு வசதிகள் செய்து தருவதற்கான சில ஏற்பாடுகளை இரயில்வே குழு நிர்ணயித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு இரயில் பெட்டியிலும் பொருத்தப்பட வேண்டிய விசிறிகளின் எண்ணிக்கையை அக்குழு நிர்ணயம்செய்துள்ளதாம்.

மேலும், இரண்டாவது, மூன்றாவது வகுப்புப் பெட்டிகளில் இருக்கும் கக்கூசுகளில் டவல் துணிகள் தொங்கவிடுவதற்கான ஏற்பாடுகளும், மூன்றாவது வகுப்பில் பயணம் செய்வோர் இரவுக் காலங்களில், தூங்குவதற்கு வசதியான வண்டிகளில் தொப்பிகள், துணிகள் போன்றவற்றைத் தொங்கவிடுவதற்குத் தேவையான மூளைகள் கொக்கிகள் போன்ற வசதிகளும் செய்துதர நிர்ணயித்திருக்கிறதாம் அந்தக் குழு!

பொது மக்கள்

ஒத்துழைப்பு வேண்டுமாம்

டில்லியின் முயற்சி

புதுடில்லி, ஆக. 31—

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அமுலுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவது சம்பந்தமாகப் பல்வேறு சர்க்கார் இலாகாக்களின் வேலையையும் இணைப்பதற்கு என்று இந்திய சர்க்கார் குழு ஒன்று நியமித்திருக்கின்றனராம்.

பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் குறித்து மாநில சர்க்கார்கள் செய்கின்ற சிபாரிசுகள் சம்பந்தமாக அக்குழு முடிவுகள் மேற்கொள்ளும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட இத்தகவலை மத்தியத் திட்ட அமைச்சர் குல்சாரிலால் நந்தா மாநிலங்கள் சபையில் தந்திருக்கிறார்.

ஜெய்ப்பூரில் ஒரு தொழிற் பண்ணை

திட்டத்திற்கு மத்திய சர்க்கார் கடனும் மானியமும் தருகின்றனர்

புதுடில்லி, ஆக. 31—

ஜெய்ப்பூரில் ஒரு தொழில் பண்ணையை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றுக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர். இதற்காக இராஜஸ்தான் சர்க்காருக்கு ஆரம்ப ஏற்பாடாக, ரூ. 4,75,000 கடனும், ரூ. 5,000 மானிய உதவியும் அளித்திருக்கின்றனர். மொத்தம் 25 ஏகர் பரப்பளவுள்ள இந்தத் தொழில் பண்ணையை அமைப்பதற்கு மொத்தம் சுமார் ரூ 40,26,000 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. திட்டத்துக்காகும் செலவு முழுவதையும், மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் கடனாக வழங்குவார்கள்.

ஜெய்ப்பூர் திட்டத்துடன், நாட்டில் பல்வேறு மாநிலங்களில் இதுவரையில் 15 தொழில் பண்ணை அமைப்பதற்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியுள்ளனர். தொழில்துறை அபிவிருத்திக்கு இப்பண்ணைகள் மேற்கொள்ளும் திட்டங்கள் சிறந்த முறையாக இருக்குமெனக் கருதப்படுகிறதாம்.

வடநாட்டில் கழிவுப் பட்டு நூல் ஆலைகள்?

புதுடில்லி, ஆக. 31—

அசாம் சர்க்கார், மொத்தம் 3,000 கதிர்களைக்கொண்ட கழிவுப் பட்டு நூல் (ஸ்பன் சில்க்) நூற்பு ஆலை ஒன்றை ஏற்படுத்துவதற்காக பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர் என்றும், இதேபோன்று நூற்பு ஆலைகளை ஏற்படுத்துவதற்காக மற்றும் பீகார். மேற்கு வங்காளம், ஜம்மு-காஷ்மீர் சர்க்கார்களிடமிருந்து வந்துள்ள யோசனைகளை மத்திய பட்டு போர்டு ஆராய்ந்துவருகிறது என்றும் மத்திய உற்பத்தி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், தற்போது மைசூர் இராஜ்யத்தில் உள்ள சென்னப் பட்டணம் என்ற இடத்தில் மட்டுமே கழிவுப் பட்டு நூல் நூற்பு ஆலை ஒன்று வேலை செய்துவருகிறது என்றும், ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் கழிவுப் பட்டு முழுவதையும் உபயோகிப்பதற்கு மொத்தம் சுமார் 6,000 கதிர்கள் கொண்ட ஒன்றிரண்டு நூற்பு ஆலைகள் தேவைப்படும் என்றும் மந்திரி மேலும் கூறினர்.

தொழிலாளருக்கான

வீடுகள் கட்டத் திட்டமாம்

சென்னை, ஆக. 31—

சென்னை நகரிலுள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் 1000 வீடுகள் கட்ட மாநில தொழில் கமிஷனர் சர்க்காருக்குப் பிரரேபணைகள் சமர்ப்பித்திருக்கின்றாராம்.

கோவை, இராசபாளையம், மதுரை, திண்டுக்கல், சிவகாசி, திருச்சி, சேலம் ஆகிய தொழிற்சாலைப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதின் சாத்தியக்கூறுகளையும் அவர் ஆராய்ந்து வருகிறாராம்.

அண்மையில், சென்னை மாநில சர்க்கார் அதிகாரிகள், இந்திய சர்க்கார் குடியிருப்பு வசதி ஆலோசனையாளருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தனர். இதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சென்னை சர்க்காரின் உத்திரவின் விளைவாகவே, கமிஷனர், மேற்குறிப்பிட்ட 1000 வீடுகளைக் கட்ட திட்டம் சமர்ப்பித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

மேலும், நடப்பு ஆண்டில் சென்னை நகரில் உபரியாக 2000 முதல் 4000 வீடுகள் வரை கட்டுவதென சென்னை மாநில சர்க்கார் வகுத்துள்ள திட்டத்தை மத்திய சர்க்கார் அதிகாரி வரவேற்றிருப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

‘மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கில மொழியே போதன மொழியாக இருக்கவேண்டும்’

‘நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்தது’

நாட்டின் எதிர்கால மருத்துவப் பிரச்சினைப்பற்றி அமைச்சர் ஷெட்டி கருத்து

‘ஒன்றுக்கொன்று உலக நாடுகளின் தொடர்பு பெருகிவரும் இந்நாளில், மருத்துவ முறைகள் நாட்டுக்கு நாடு பரவும்; மருத்துவத்துறை இலக்கியங்களில் ஆங்கிலம் வளம் சிறந்து விளங்குகிறது; இதற்காக வேனும், மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலமே போதன மொழியாக இருக்கவேண்டும்”

என்று, வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரிப் பட்டதாரிகள் நாள் விழாவில சென்னை மாகில சுகாதார அமைச்சர் எ. பி. ஷெட்டி பேசுகையில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

“நோயாளிக்கு சிகிச்சை தருகின்ற மருத்துவர், அந்நோயைப் பற்றி மட்டும் அறிந்து கொண்டு மருத்துவம் செய்தால் அதனால் மிகுந்த பலன் எதும் கிடைக்காது நோயாளியின் நாடி முதல், அவனுடைய சூழ்நிலைகள் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் அத்தனையையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது மிக அவசியமாகும்; அவ்வாறு தெரிந்து கொண்ட பின்னர் மருத்துவம் செய்வதில் அதிகப்பயன் உண்டு.

“கிராமப்புறங்களில் மருத்துவ வசதி தருவதானது நம்மை எதிர்நோக்கியிருக்கும் முக்கியப் பிரச்சினையாகும்; கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள், தங்கள் சூழ்நிலைச் சுகாதாரக் குறைபாட்டினாலும், உணவுக் கோளாறுகளாலும், வீடுகள்போன்ற வசதிக் குறைபாட்டினாலும் மட்டுமல்லாமல் அறியாமையினாலும் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார்கள். இப்பகுதிகளில் நோய்க்குச் சரியான மருந்து கொடுத்து மக்களைக் காக்கத்தேவையான மருத்துவச் சாலைகள்வேண்டும். அதுமட்டுமல்ல; நோய்வந்த பின்னர் அதற்கு மருந்துகொடுத்துக் காக்கச் செய்யும் ஏற்பாடுகளை விட, அப்பகுதிகளில் நோய்வராமல் தடுக்கச்செய்ய வேண்டிய ஏற்பாடுகளே அதிகம் தேவைப்படுகின்றன.

“எனவே, மருத்துவர்கள், நோய்க்கு மருந்து கொடுப்பதோடு, நோயைப்பரவவொட்டாமல் தடுப்பதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையும் அறிந்து செயல்படுபவர்களாக விளங்கவேண்டும்”

இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு மேலும் அவர், சில புள்ளி விவரங்களையும் தந்திருக்கிறார்:—

“இந்தியாவில் தற்போதுள்ள 42 மருத்துவக் கல்லூரிகளிலிருந்து ஆண்டுதோறும் 2,500 மாணவர்கள மருத்துவப்பட்டம் பெற்று வருகின்றனர்; ஏற்கனவே நாட்டில் தகுதி பெற்ற மருத்துவர்கள் 70,000 பேர் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும்கூட, நாட்டிலுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பார்க்கும்போது இந்த மருத்துவர்களின் எண்ணிக்கை நம் நாட்டுக்குப் போதுமானதாக இல்லை.”

மேற்கண்ட புள்ளி விவரக் குறிப்பைச் சுட்டிக்காட்டின அமைச்சர், ‘நாட்டில், அனைவருக்கும் இலவசமாகவே மருத்துவம் செய்யப்படும் ஒரு காலம்வரும் என்பதை நாம் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருப்போம்,’ என்று குறிப்பிட்டார்.

ஏழை மாணவர்கட்கு உபகாரச் சம்பளம்

டில்லியின் திட்டம்

புதுடில்லி ஆக. 31—

‘மெட்ரிகுலேஷன்’ பரீட்சையில் விசேடத் தேர்ச்சியுடன் தேர்வு பெற்ற ஏழைமாணவர்கள், மேற்கொண்டுப் பல்கலைக் கழகங்களிலோ, தொழில் நுட்பக் கல்லூரிகளிலோ படிக்க உதவி செய்யும் வகையில் இந்திய சர்க்கார் உபகாரச் சம்பளத் திட்டம் ஒன்று ஏற்படுத்தியிருக்கின்றனர் என்ற தகவல், இந்திய சர்க்கார் வெளியிட்டிருக்கின்ற கல்வி இலாகா அறிக்கை ஒன்றில் தரப்பட்டிருக்கிறது.

அகில இந்திய அடிப்படையில், மொத்தமாக 400 உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட இருக்கின்றனவாம் மேலும், இந்த உபகாரச் சம்பளங்கள், மக்கள் தொகையின் அடிப்படையிலேயே மாநிலங்களிடையே விநியோகிக்கப்படும் என்றும் அவ்வறிக்கையின் மூலம் தெளிவாக்கப்படுகிறது.

காலக் கெடுவைக்கூட மாற்ற வேண்டிய தேவை இல்லையாம் !

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசு

கோவை, ஆக. 30—

‘இந்தி மொழியை இந்திய சர்க்காரின் ஆட்சி மொழியாக்க அரசியல் சட்டத்தில் விதித்திருக்கிற காலக் கெடுவை மாற்ற வேண்டிய தேவையில்லை’ என்று ஆட்சி மொழிக்குழு, இந்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தவிர, அக்குழு, ஆங்கில மொழியைத் தொடர்ந்து நீடித்து உபயோகப்படுத்துவதையும் விரும்பவில்லையாம் !

குழு சமர்ப்பித்த அறிக்கை இப்போது சர்க்காரின் பரிசிலனையில் இருந்து வருகிறதாம் !

கல்வித் திட்டங்களை நிறைவேற்ற!

புள்ளி விவரம் சேகரிக்கும் யூனிட்டுகள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உள்ள கல்வித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரும்—மாநில சர்க்காரும் ஒன்றுபட்டு வேலை செய்வதற்கு வழி செய்யும் வகையில், திட்டமிடவும் புள்ளி விவரங்கள் சேகரிக்கவுமான ‘யூனிட்’டுகளை அமைக்குமாறு டில்லி சர்க்கார், மாநில சர்க்கார்களைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த ‘சர்வே’க்கு சென்னை மாநில சர்க்கார் தம்மாலான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக இசைவு தந்திருப்பதாகவும், இதற்காகும் செலவில் மூன்றில் ஒரு பகுதியைக்கூடத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் அறிவித்திருக்கின்றனராம்.

சென்னை மாநிலத்தில் மேற்படி சர்வேயை நடத்த சர்க்கார், ஒரு விசேட அதிகாரியை நியமித்திருக்கிறது.

இந்தச் சர்வே சம்பந்தமாக டில்லியில், மத்திய சர்க்காரால் நடத்தப்பெறும் விவாத அரங்கில் இந்த விசேட அதிகாரி கலந்துகொள்வாராம்.

மேலும், மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்கள், பள்ளி செல்லும் மாணவ, மாணவியரின் தொகை, பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகள் தொகை, ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களையும் இந்த அதிகாரி சேகரிப்பார் என்றும் கூறப்படுகிறது.

சர்க்காரை ஏமாற்றும் போலிக் கல்வி நிலையங்கள்

புதுடில்லி, ஆக. 31—

சர்க்காரை ஏமாற்றுகிற போலிக் கல்வி நிலையங்கள் விவகாரம் குறித்து சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாயும், மாநிலங்களுடன் கலந்துகொண்டு அதுபோன்ற கல்வி நிலையங்கள் மீது நடவடிக்கை எடுப்பதாயும் உதவிக் கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இராமநாதபுரத்தில் தமிழ்க் கல்லூரி ?

குமாரசாமி இராசா முயற்சி ?

கோவை, ஆக. 30—

ஒரிசா மாநிலக் கவர்னர் பதவியிலிருந்து விலகிவிட இருக்கிற கனம் குமாரசாமி இராசா அவர்கள், தமது மாவட்டமான இராமநாதபுரத்தில், ஒரு தமிழ்க் கல்லூரியை ஆரம்பிக்க இருப்பதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

தற்காலத்தில் மாணவர்கள் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றிலெல்லாம் தமிழ்மொழி பயின்றும் கூடத் தமிழ் மொழியில் போதிய திறமை பெற்றில்லாததைக் குறிப்பிட்டு அவர், தமிழ் இலக்கியத்தில் தகுந்த பயிற்சி அளிப்பதே தாம் ஆரம்பிக்கப்போகும் புதிய கல்லூரியின் நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரிய-திராவிட வேற்றுமைகளை மறைக்க ஆச்சாரியாரின் விசித்திரவாதம்

உலக நாகரீக இனங்களில் எல்லாம் இந்திய இனமே மிகக் கலப்புடையனவாம்!

“நம் நாட்டில் பல மதங்கள் உள்ளன; இது கெடுதி பயப்பவை என நான் கருதவில்லை. பல சாதிகள், வகுப்புகள், பிரிவுகள் இருந்தாலும் நாம் ஒற்றுமையாகச் சேர்ந்து, ஆனந்தமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த மைனரிட்டியோ, அந்த மைனரிட்டியோ வேறு எங்கோ போகவேண்டுமென்று கூச்சலிடுவது அர்த்தமற்றது.

“பல்வேறு வகையான பூக்கள் பெண்களை எவ்வாறு அழகானவர்களாகத் தோற்றமளிக்கச் செய்கிறதோ. அதுபோலவே நமது எல்லா மதங்களும், பழக்க வழக்கங்களும் சுமுகமாகச் சேர்ந்து இருக்கமுடியும்.

“இக்கோட்பாடு, மொழிகளுக்கும் பொருந்தக்கூடியதுதான். அவகாசம் தரப்பட்டால் நம்முடைய மொழிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை என்பதை நிரூபித்துக்காட்ட முடியும். மொழியானது ஒருவருடைய பண்பின் பகுதியாகாது. மொழி அல்லது மதம் அல்லது மாவட்ட அடிப்படையில் ஒருவருடைய பண்பினை மதிப்பிடும் போக்கு இருந்துவருகிறது. மொழி, நமது முன்னோர்கள் நமக்கு அளித்திருக்கும் ஒரு பரிசாகும். நமக்குள்ள அந்த எல்லா பரிசுகளையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.”

இவ்வாறு ஆச்சாரியார் அவர்கள், சென்னை லயோலா கல்லூரியில் மாணவர்களடங்கிய கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், உலகிலுள்ள நாகரீக மனித இனங்களிலெல்லாம் இந்தியாவிலுள்ள இனம்தான் மிகுந்த கலப்பு இனமாகும் என்றும், இப்போது காணப்படும் வேற்றுமை’கள்கூட இந்தக் ‘கலப்பின்’ விளைவேயாகும் என்றும், சிறிது காலத்திற்குப் பின்னர் மக்கள் இந்தக் கலப்பை கண்டுபயந்து விதிகளை வகுத்தனர் என்றும் கூறிவிட்டு, ‘ஒட்டு’ப் போடுவதின் மூலம் செடிகளும் பூக்களும் நன்றாக வளருகின்றன; ஆனால், இதைக் கூறுவதால் ‘கள்ள நட்புறவுகளுக்கு நான் சிபாரிசு செய்வதாக அர்த்தமில்லை’ என்று குறிப்பிட்டாராம்!

சென்னை மாநிலத்தில் நான்கு தொழிற்பண்ணைகள்

ரூ. 5 இலட்சம் செலவில் அமையும்

சென்னை கிண்டியில் ஒன்றும் விருதுநகர் அருகே ஒன்றுமாக இரண்டு தொழிற்பண்ணைகளும், இரண்டு தொழிற்காலனிகளும் அமைக்கவும், பாலக்காடு, ஈரோடு நகரங்களில் இரண்டு சிறு தொழில் பண்ணைகள் அமைக்கவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம்.

1957 பிப்ரவரித் திங்களில் வேலை ஓரளவு முடிந்துவிடும் என்றும், தொழிற்சாலைகளுக்கான கட்டிடங்கள் தயாராகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

கிண்டி இரயில்வே நிலையத்திற்கு எதிரில் இந்தத் தொழிற்பண்ணைக்காக 70 ஏகர் நிலம் வாங்கப்பட்டுவிட்டதாம்.

விருதுநகரில் சூலக்கரை இரயில் நிலையத்திற்கு எதிரில் 54 ஏகர் நிலம் பெறப்பட்டுவிட்டதாம்.

பாலக்காட்டில் துவங்கப்படவிருக்கும் சிறு தொழிற்பண்ணை, மலபார் மாவட்ட கூட்டுறவு உலோகம் மற்றும் மரத்தொழிற்சாலை அமைந்துள்ள 22 ஏகர் பரப்பிலேயே அமையும் என்றும், ஈரோடு பண்ணை 10 ஏகர் பரப்பில் அமையும் என்றும் கூறப்படுகிறது.

கிண்டியில் 90, விருதுநகரில் 50, பாலக்காட்டில் 25, ஈரோட்டில் 12 தொழில் ‘யூனிட்’டுகள் நிறுவப்படுமாம்.

இந்தத் திட்டங்களுக்காக ரூ. 52,58,400 வரை செலவிட சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

‘கைத்தொழில் துறையில் தென்னாடு தக்கவாறு முன்னேறவில்லை’

‘இதை யாரும் மறுக்க முடியாது’

‘இப்படிக் குறைப்படுவது வீண் ‘மாகாணப் பித்து’ம் ஆகாது’

“கைத்தொழில் அபிவிருத்தியில் தென்னிந்தியா புறக்கணிக்கப்படுகிறது என்றகுறை இங்கு அதிகம் உணரப்பட்டிருக்கிறது. பொது மக்கள் கருத்து ஒருபுறமிருக்க, பொறுப்பு வாய்ந்த ஸ்தல அதிகாரிகளும் வியாபாரத் துறைப் பிரமுகர்களும் அதே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். மத்திய சர்க்கார் சார்பில் இப்புகார் மறுக்கப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. மத்திய சர்க்கார் அடியுடன் கவனஞ்செலுத்தவில்லை என்றும் சொல்வதற்கு இல்லை..

“ஆயினும், தென்னாட்டின் ஜனத்தொகை, மூலப் பொருள் வசதி முதலியன கருதி தென்னாடு தக்கவாறு கைத்தொழில் துறையில் முன்னேறவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு குறைப்படுவது மாகாணப் பித்தும் ஆகாது,”

என்று, 30—8—56 ‘சுதேசமித்திரன்’ தலையங்கம் குறிப்பிடுகிறது.

ஆசிரியர்களாக ஆசைப்பட்டார்களாம்!

புதுடில்லி, ஆக. 31—

‘அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் இங்கிலாந்தின் மன்னர்’ என்று ஆசிரியர்கள் தேர்வில் கலந்துகொண்ட பட்டதாரி (பி. ஏ. பி. டி) பதிலளித்தாராம்! ‘இங்கிலாந்தில் இப்போது மன்னர் கிடையாதல்லவா?’ என்று தேர்தல் நடத்திய அதிகாரி கூறியதும், அந்த அபேட்சகர் மன்னிக்கவும்; ஐசனோவர் இங்கிலாந்து பிரதான மந்திரி’ என்று கூறினாராம்.

இந்தத் தேர்வுக்கு வந்திருந்த வேறு சிலர் அளித்த வேடிக்கையான பதில்கள் பின்வருமாறு:—

வி. கே. கிருஷ்ணமேனன் இந்திய உப-ராஷ்டிரபதி!

டில்லியிலுள்ள ‘செங்கோட்டை’ அக்பரால் கட்டப்பட்டது!

‘பஞ்சசீல’த் தத்துவங்கள் ரஷ்யாவால் தயார் செய்யப்பட்டு ஐ. நா. நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்திய மத்திய மந்திரிசபையில் பெண் உறுப்பினர் ஒருவர் கூடக் கிடையாது என்று அந்த அபேட்சகர்களில் ஒரு பெண் பதிலளித்தாராம்!

சூயஸ் கால்வாய் இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ இருப்பதாகவும், அதை எகிப்து ஆக்கிரமித்திருப்பதாகவும் ஒரு அபேட்சகர் கூறினாராம்!

‘பனாமா’ ஒருதரம் பினேடு, சிகரெட்டும் என்று ஒருவர் கூறினாராம்!

‘ராஜகட்டம்’ என்றால் என்னவென்று ஒரு அபேட்சகருக்குத் தெரியவில்லையாம்!

ஒரு ஆண் அபேட்சகர், தான் இதுவரை பத்திரிகையே வாசித்தது கிடையாது என்ற உண்மையைக் கூறினாராம்!

பட்டப் பரீட்சையில் ‘அரசியல்’ இஷ்டபாடமாகத் படித்து தேறிய ஒரு பெண் அபேட்சகருக்கு, ராஜ்யம் (ஸ்டேட்) என்பதின் விளக்கம் கூறத்தெரியவில்லையாம்!

நிலக்கரிக்கு ஒரே விலை!

நாடு முழுவதும் அமுலாக்க டில்லி ஆலோசனை

புதுடில்லி, ஆக. 30—

நாடு முழுமையிலும் நிலக்கரிக்கு ஒரே விலை இருக்கும்படி செய்வது என்ற திட்டம் மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருந்து வருவதாக உற்பத்தி அமைச்சர் கே.சி. ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

நிலக்கரியைத் தொலைதூரத்திலிருந்து இறக்குமதி செய்து உபயோகித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு இதன் மூலம் விசேட அனுகூலம் உண்டாம். நிலக்கரி அருகாமையில் கிடைக்காததால் பயன்படுத்தப்படாமல் இருக்கும் கனிச்சத்துக்களை உபயோகிப்பதற்கான வாய்ப்பு இதன் விளைவாக அதிகரிக்கலாமாம்,

தோழர்களை அழைக்கிறார் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும் அவர் பேசியதாவது :—

"கழகத்திடம் நாட்டு மக்கள் கொண்டுள்ள நல்லெண்ணம், இந்த ஒத்துழைப்பைத் தருவதற்கு உதவி புரியும் என்று நான் நம்புகிறேன்.

"இதுபோன்ற கூட்டங்களில் நாங்கள் பேசுவதே கழகத்திற்கான தேர்தல் பிரச்சாரமாகிவிட முடியாது. நாங்கள் நாட்டில் உள்ள எல்லா மக்களையும் சந்திப்பது என்பது இயலாத காரியமாகும். இதுபோன்ற கூட்டங்களுக்கு ஆர்வத்தோடு திரளும் மக்களை, கழகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்கு உற்சாகமூட்டுவதற்காகவே நாங்கள் வருகிறோம்; அவ்வளவு தான் எங்களால் முடியும்.

"கழகக் கூட்டத்திற்கு வந்து திரும்பும் ஒவ்வொருவரும் தாங்கள் சந்திக்கக்கூடிய மக்களை—தாங்கள் பணிபுரியும் பல்வேறு அறைகளிலும் ஈடுபட்டிருப்பவர்களைச் சந்தித்து சந்திக்கிற வாய்ப்புகளை உண்டுபண்ணிக் கொண்டு, அவர்களிடத்தில் நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டும்.

"சந்துமுனைகளில்—வெற்றிலை பாக்குக் கடைகளில்—சந்தைக் கடைகளில்—சினிமா தியேட்டர்களில் — எங்கெல்லாம் மக்கள் கூடுகிறார்களோ அங்கெல்லாம் தி. மு. கழகக் கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டும், தோழர்கள்!

"மாணவத் தோழர்கள், காங்கிரசாட்சியின் கேடுகளை—மக்களை மதியாப் போக்கினை விளக்கும் வாசகங்களை துண்டுக் காகிதங்களில் எழுதிப் போவோர் வருவோரிடமெல்லாம் தரலாம்!

"சினிமாவிற்குச் சென்றால், அங்கு காட்டப்படும் செய்திப் படத்தில், எல்லாக் காட்சிகளிலும் நேருவின் உருவமே வந்து போவதைச் சுட்டிக்காட்டி அருகிலிருப்பவரிடம் 'பார்த்தீர்களா, காமராசர் உருவத்தை ஒரு முறைகூடக் காணவில்லையே?' என்று கேட்கலாம்.

"சினிமாவில் கேட்கிற பாட்டுக்கள் எல்லாம் இந்தி மெட்டுக்களாயிருக்கும்; அவற்றைச் சொல்லி, 'நமது திருப்புகழ், காவடிச் சிந்து மெட்டுக்கள் வடநாட்டவருக்குத் தெரியுமா? தெரியாமற்போனது ஏன்?'—என்று எடுத்துரைக்கலாம்.

"கடைக்குப் போனால், அரிசி வாங்கவரும் பெண்மணி ஒருவர், படி அரிசி பதினைந்தணாவா?' என்று சோகத்தோடு கேட்கும்போது, 'பாழாய்ப் போன காங்கிரசாட்சியில் ரூபாய்க்கு இரண்டு படியா கிடைக்கும்? படி பதினைந்தணாவுக்குமட்டுமா விற்கும்; ஒரு ரூபாய் இரண்டணாவுக்கும்கூட விற்கும்,'—என்று எடுத்துக்காட்டலாம்.

"இப்படி மக்களைச் சந்திக்கிற இடமெல்லாம் தோழர்கள், நாட்டு நலிவுக்கான காரணங்களை விளக்கி சிறு சிறு உரையாடல்கள் மூலம் நாட்டவருக்கு நல்லறிவுத் தெளிவு ஏற்படச் செய்வதுதான் உண்மையான தேர்தல் பிரச்சாரமாகும்.

"லெனின் சமதர்மத்தை ஸ்தாபிப்பதற்காகப் போராடிக்கொண்டிருந்த காலத்தில், ஒரு விறகு வெட்டி லெனினை அணுகி, 'நான் சமதர்ம இலட்சியத்திற்காகப் பாடுபட விழைகிறேன்; என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டானாம்; லெனின் 'அப்பா, நீயோ விறகு வெட்டிப் பிழைக்கிறாய்; அந்தப் பிழைப்பையும் விட்டுவிட்டால் கஷ்டப்படுவாய்; நீ விறகு வெட்டிப்பிழைத்துக்கொண்டே சமதர்மத்திற்குச் சேவை செய்யலாம்; விறகு பிளக்கும்போது தெறிக்கும் வியர்வையை, வானத்தை அண்ணாந்து பார்த்து, 'ஆண்டவா!' என்று கூறியல்லவா துடைக்கிறாய்? இனிமேல், எதிரே உள்ள மாளிகையைப் பார்த்துக்கொண்டு வியர்வையைத் துடைத்துக்கொள்; அதுவே நீ சமதர்மத்திற்குச் செய்யும் சேவை' என்று கூறினாராம், லெனின்!

"அதுபோலவே இங்கே தோழர்கள் தாங்கள் கவனித்துக் கொண்டிருக்கும் வேலைகளை விட்டு விட்டுக் கழகப் பணியாற்ற வாருங்கள் என்று நான் அழைக்கவில்லை; வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டே ஈடுபட்டிருக்கும் வேலைத் துறைகளுக்குத் தேவையான பாவையில் கழகக் கருத்துக்களைப் பரப்பலாம்.

"கடற்கரையில் ரேடியோ கேட்டுக்கொண்டிருக்கும் ஒரு பார்ப்பனர், பாடுவது என்ற சிந்தனை இருந்தால் பக்கத்திலிருப்பவரிடம் 'சுதேசமித்திரனின்' பெருமையைப்பற்றிப் பேசுவார்; அருகிலிருப்பவர், 'இருங்கள்; பாட்டைக் கேட்கலாம்' என்றால், 'பாடுபவர் சித்தூர்தானே! சாரீரம் கட்டையாயிற்றே!' என்று கூறிவிட்டு அரியக்குடியின் சாரீர மகிமையை எடுத்துரைக்கத் தொடங்குவார்.

"வாய் நேர்ந்திருப்பதால் அந்தப் பார்ப்பனர், தம் குலத்துக்காக பிரச்சாரம் செய்கிறார்.

"நமது தோழர்கள், நாட்டு நிலை குறித்தும் கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும் பிரச்சாரம் செய்வதற்கு இதுபோன்று வாய்த்திறம்படைத்தவர்களாக இருக்க வேண்டும். எல்லா மக்களும் விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்."

கழகக் கூட்டம்

★

புள்ளம்பாடி :

5—9—56 மாலை 5 மணிக்கு

தலைவர் : ஆ. சோமசுந்தரம்

கொடியேற்றுபவர் : அம்பில் தர்மலிங்கம்

பேசுவோர் : இரா. நெடுஞ்செழியன், எம். எஸ். மணி

(குறிப்பு:—மாலை 4-மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்; வெளியூர் கிளைக் கழகத் தொண்டர்கள் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்)

சென்னை 11-வதுவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கூட்டம்

4—9—56 மாலை 6-மணிக்கு, சென்னை 11-வதுவட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4-88 ஏ, பிராட்வே). கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; திராவிட நாடு பிரிவினை நாள் வாரம், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

துணி வரி அதிகரிப்பு

மக்கள் சபை உறுப்பினர் எதிர்ப்பு

புதுடில்லி, செப். 1—

துணிகளுக்கு—குறிப்பாக மட்டரகத் துணிகளுக்கு வரி விதிப்பை அதிகரித்திருப்பதை எதிர்த்து சுமார் 30 காங்கிரஸ் எம்.பி.க்கள் பிரதமர் நேருவைப் பேட்டி கண்டு மனு ஒன்று தந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

'இந்த வரி விதிப்பு ஏழை எளிய மக்களை மேலும் வாட்டுவதாகும்' என்று அவர்கள் எடுத்துரைத்திருக்கின்றனராம்.

'காங்கிரஸ் ஆடிப் போய்விட்டது'

'இந்தியாவின் ஐக்கியம் சீர்குலைந்து விட்டது'

தலைவர் தேபர் ஒப்பாரி

"மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை எதிர்த்து அண்மையில் நடைபெற்றக் கிளர்ச்சிகள், கலவரங்கள் முதலியன, காங்கிரஸ் நிறுவனத்தை அடியோடு அசைத்துவிட்டன; அவை, நாட்டின் ஐக்கியத்தைச் சீர்குலைத்துவிட்டன. தற்போது பிரதேச மொழி வெறியும், மொழி வெறியும் நாட்டில் தலைதூக்க ஆரம்பித்து விட்டன. 'ஜெய் இந்த்' என்று சொல்வதற்குப் பதிலாக இப்போது, 'ஜெய் குசராத்', 'ஜெய் மகாராட்டிரா' என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்"

என்று, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் அவர்கள், மத்திய பாரத், போபால் ஆகியவற்றைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியர் சம்மேளனம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் முறையிட்டிருக்கிறார்.

கடந்த நாட்டு மாத காலமாக, நாட்டில் மாநிலப் புனரமைப்பு குறித்து ஏற்பட்டுள்ள கிளர்ச்சியின் காரணமாக, மக்களிடையே வேற்றுமை உணர்வு, துவேஷ மனப்பான்மை எல்லாம் தலைதூக்கி நிற்கின்றன என்றும், காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கூட பிளவுகளும் பூசல்களும் ஏற்பட்டு விட்டன என்றும், எனவே பொது மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடும் காங்கிரஸ் ஊழியர்கள் ஏராளமான அளவில் அவசரமாகத் தேவைப்படுகின்றனர் என்றும், அவர் ஒப்பாரி வைத்திருக்கிறார்!

'சோஷலிசபாணி சமுதாய முறை ஈடேறாது'

"நமது நாட்டில் வாழும் 36 கோடி மக்களில் 16 கோடிப் பேருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 125 தான் வருமானமாக இருந்து வருகிறது. சுமார் 1½ கோடி மக்கள், காடுகளில் கிடைக்கும் பழ வகைகள், இலைகள் போன்றவற்றை மட்டுமே உண்டு காலங்கடத்துபவராக இருக்கின்றனர். இந்த மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தாவிட்டால், 'சோஷலிச பாணி சமுதாயம்' அமைப்பதென்ற காங்கிரசின் இலட்சியம் நிச்சயமாகப் பூர்த்தி செய்யப்பட முடியாது — ஈடேறாத ஒன்றாக ஆகிவிடும். இதனை நன்குணர்ந்து காங்கிரசார், நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

8—9—56 சனி மாலை 6-மணி

கோகலே மண்டபம்

★

தலைவர் :

கே. ஏ. மதியழகன்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

'இலக்கிய இன்பம்'

என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

★

நன்கொடை : ரூ. 1; அணா 8,

—தலைமைக் கழகம் (தி. மு. க.

வெள்ளையரின் நிறவெறியை ஒடுக்க இராணுவம்

அமெரிக்காவில் நிலைமை படுமோசமாகிறது

கிளிண்டன், செப் 1—

வெள்ளையர் பள்ளிகளில் நீக்ரோ மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கு அமெரிக்காவின் தென் மாநிலங்களில் பலத்த கண்டனமும் ஆர்ப்பாட்டங்களும் நிகழ்ந்து வருவதும், அங்கு தற்போது நிலைமை மிக மோசமாக இருந்து வருவதும் ஏற்கனவே அறிந்ததே! கிளிண்டன் எனும் நகரில் கடந்த ஒரு வார காலமாகத் தலை விரித்தாடும் நிறவெறியாட்டத்தை அடக்கி ஒடுக்கவும், அவ்விடங்களில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டவுமாகத் துருப்புக்களை அனுப்புவதற்குக் கவர்னர் பிராங்கிளெமெண்ட் உத்தரவிட்டிருக்கிறார்; அந்நகரில், தற்போது அவசர நிலைப் பிரகடனமும் செய்யப்பட்டிருக்கிறதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இன வெறிக்குத் தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துவிட்ட இங்குள்ள 5 வெள்ளைக் கோஷ்டியினர், கிளிண்டன் நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளியொன்றில் வெள்ளையரும் நீக்ரோக்களும் ஒன்றாகச் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவதை எதிர்த்து, நேற்று மிகப் பெரும் அளவில் கொடும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். பெருங்கூட்டக் கூச்சல் போட்டுக்கொண்டு தெருக்களில் ஓடியவர்களை இந்தக் கும்பலை கலைக்க போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர். நகரில் அமைதியை நிலைநாட்ட, மாநிலப் போலீசார் நகரில் திரண்டு வந்திருக்கின்றனர். அவர்களுக்குத் துணையாக 100 ரோந்து சுற்றும் போலீசாரையும் அம்மாநிலக் கவர்னர் அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிறத் திமிர் கோரத்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தூக்கிலிட்டு வைத்திருந்தனராம்—நீக்ரோவரை மிரட்டுவதற்காக!

இதுபோன்ற காட்டுமிராண்டித் தனத்தில் ஈடுபடும் நிறத்திமிர் கொண்ட வெள்ளையர்களின் அட்டகாசங்களை அடக்கி, அமைதியை நிலைநாட்ட சர்க்கார் மிகச் சிரமப் படுகின்றனராம்.

சம்பவங்களை ஒட்டி மூன்று வெள்ளையர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

112 பேரைக் கொன்ற கோர இரயில் விபத்து

ஐதராபாத், செப். 2—

சுமார் 112 பேர்களைக் கொன்று 25 பேர்களைப் படுகாயப்படுத்திய கோர இரயில் விபத்து ஒன்று இங்கிருந்து 60 மைல் தொலைவில் மஹபூப் நகர் அருகே நேற்று இரவு நிகழ்ந்திருக்கிறது.

ஜங்காவுக்கு என்ற சிற்றூர் ஒன்றினமீது கட்டப்பட்டுள்ள பாலம், பெய்த பெருமழையினால் முறிந்ததின் காரணமாக செகந்தராபாத்திலிருந்து துரோணாசலம் போய்க் கொண்டிருந்த பாசஞ்சர் இரயிலின் என்ஜினும் அடுத்த இரண்டு வண்டிகளும் குடைசாய்ந்து நீருக்குள் வீழ்ந்தனவாம்.

இதனால் குடை கவிழ்ந்த இரு வண்டிகளிலுமிருந்தோர் அனைவரும் பலியாயினர் என்று கூறப்படுகிறது.

வண்டியோட்டிகள் எல்லோரும் சந்தர்ப்பவசமாகத் தப்பிவிட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்களில் மூவர் இரயில்வே அதிகாரிகள் என்று கூறப்படுகிறது.

ஐந்து மைல் தூரம், பெருமழையையும் பொருட்படுத்தாது கிராமவாசி ஒருவர் சைக்கிளில் விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து மகபூப் நகர் சென்று செய்தி தந்திருக்கிறார்.

உடனே சிகிச்சையளிப்பதற்கான நிவாரண வசதிகளுடன் விசேட இரயில்களில் அதிகாரிகள் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்.

காயமுற்றோர் அனைவருக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. கொல்லப்பட்டோரின் சடலங்கள் மீட்கப்பட்டுவருகின்றன.

சென்ற 1954-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில்தான் ஜால்கான் அருகே இதுபோன்ற கோரமான விபத்து ஒன்று நிகழ்ந்தது. அதில் 140 பேர் கொல்லப்பட்டது நினைவிலிருக்கலாம்.

மத்திய இரயில்வே மந்திரி உட்பட பலரும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்துள்ளனர்.

கள்ள நோட்டுகள்

காலணா, அரையணாவிற்கு டில்லியில் விற்கப்பட்டதாம்!

"டில்லியில் கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு காலணா, அரையணாவிற்கெல்லாம் விற்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?" என்று மக்கள் சபையில் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டு இப்படி விற்கப்படுவது உண்மைதான் என்றும், இது குறித்து சர்க்கார் புலன் விசாரணை நடத்தி வருவதாகவும் ரெவினியூ மந்திரி தெரிவித்திருக்கிறார்.

"வேலைகளுக்காக இந்தியர்கள் மலேயாவுக்குச் செல்வதை இந்திய சர்க்கார் விரும்பவில்லை; இந்தியர்கள் வருவதை மலேயா சர்க்கார் தடுத்துவிட்டார்கள் என்ற கேள்வி எழவில்லை" என்று மக்கள் சபையில், பிரதமர் நேரு, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.